# வறுமையை துடைத்தொழிக்க அரசு பாடுபடும் - ஜாஹிட் ஹமிடி



கோலாலம்பூர், டிச. 14-
நாட்டில் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலான பொருளாதார இடைவெளியை குறைப்பதற்கு ஒற்றுமை அரசாங்கம் பெரிதும் பாடுபடும் என்று துணைப்பிரதமர் அகமட் ஜாஹிட் ஹமிடி கூறினார்.

கிராமப்புற பகுதிகளில் நிலவும் வறுமையை துடைத்தொழிக்க அங்கு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் அமல்படுத்தப்படும் என்று கிராமப்புற வட்டார மேம்பாட்டுத்துறை அமைச்சருமான ஹமிடி தெரிவித்தார்.

கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாட்டில் முதல்முறையாக கோவிட்-19 தொற்று பரவல் தாக்கம் ஏற்பட்டதை அடுத்து பல மாதங்களுக்கு வர்த்தக தொழில் துறைகள் முடக்கம் கண்டன. அனைத்துலக தொழில்துறைகள் உடனான உறவும் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக லட்சக்கணக்கானோர் வேலை இழந்து வருமானத்தையும் பறிகொடுத்ததால் நிதி நெருக்கடி ஏற்பட்டது. இதற்கு தீர்வு காண புதிய ஒற்றுமை அரசாங்கம் கடுமையாகப் பாடுபடும் என்று நேற்று தமது முகநூல் வாயிலாக வெளியிட்ட செய்தியில் ஹமிடி கூறினார்.

கடந்த 2019ஆம் ஆண்டு வெளியான புள்ளி விவரங்களின்படி கிராமப்புறங்களில் ஒரு குடும்பத்தின் மாதாந்திர வருமானம் 3,828 வெள்ளியாக இருந்தது. நகர்ப்புறங்களில் இது 6,561 வெள்ளியாக அதிகரித்தது. அதாவது கிராமப்புறங்களில் ஒருவர் 58 வெள்ளியை வருமானமாக பெற்றபோது நகர்ப்புறத்தைச் சேர்ந்தவர் 100 வெள்ளியை சம்பாதித்திருக்கிறார்.

அதே 2019ஆம் ஆண்டு மலேசியாவில் ஒட்டுமொத்த வறுமை விகிதம் 5.6 விழுக்காடாக இருந்தது. ஆனால் கிராமப்புறங்களில் அது 12.4 விழுக்காடாக பதிவாகி இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.



## கட்டாருக்கு மாமன்னர் ஆறு நாள் பிரத்தியேக பயணம்

கோலாலம்பூர், டிச. 14-
ஆறு நாட்கள் பிரத்தியேக வருகையின் பேரில் மாட்சிமை தங்கிய மாமன்னர் அல்-சுல்தான் அப்துல்லா ரி, யாதுடின் நேற்று டோஹாவிற்கு பயணமானார்.

2022 கட்டார் உலக கிண்ண கால்பந்து போட்டியினை முன்னிட்டு கட்டார் ஷேக் தபிம் மாமன்னருக்கு சிறப்பு அழைப்பு விடுத்துள்ளார் என்று இஸ்தானா நெகாரா அரண்மனை கட்டுப்பாட்டு அதிகாரி டத்தோஸ்ரீ அகமது படில் ஷம் ஷம்சுடின் தெரிவித்தார்.

உலகக் கிண்ண கால்பந்து போட்டி விழாவை கண்டுகளிக்க நமது மாட்சிமை தங்கிய மாமன்னருக்கு சிறப்பு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. இதோடு மரியாதை நிமித்தம் மாமன்னர் ஷேக் தாபிமை சென்று காண்பார்.

அநேக கட்டார் தலைவர்கள் மாமன்னருடன் சந்திப்பு நடத்த வாய்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டாரில் மலேசியர்கள் கொண்ட ஓர் ஒன்று கூடும் கூட்டத்தில் மாமன்னர் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

டிசம்பர் 19ஆம் தேதியன்று மாமன்னர் அல்-சுல்தான் அப்துல்லா தாயகம் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பெரிக்காத்தானின் நிழல் அமைச்சரவை

கோலாலம்பூர், டிச. 14-
ஒற்றுமை அரசாங்கத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக அடுத்த வாரம் தமது நிழல் அமைச்சரவை பட்டியலை பெரிக்காத்தான் நேஷனல் அடுத்த வாரம் வெளியிடும் என்று மாச்சாங் நாடாளுமன்றத் தொகுதி பெர்சத்து உறுப்பினர் வான் அகமட் பைசால் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் 19ஆம் தேதி நடைபெற்ற 15ஆவது பொதுத் தேர்தலின்போது பெரிக்காத்தான் நேஷனல் 73 இடங்களை வென்றது. பின்னர் டிசம்பர் 7ஆம் தேதி நடைபெற்ற பாடாங் செராய் தொகுதி தேர்தலிலும் அது அமோக வெற்றியைப் பெற்றது.

பாஸ், பெர்சத்து தலைமையிலான பெரிக்காத்தான் நேஷனல் கூட்டணிக்கு 74 இடங்கள் உள்ளன. அந்த எதிர்க்கட்சி கூட்டணி நிழல் அமைச்சரவை பட்டியலை வெளியிடுகிறது என்றார் பைசால்.

இந்த நிழல் அமைச்சரவையில் இடம்பெறுகின்ற எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போதைய ஒற்றுமை அரசாங்கத்தின் செயல்பாடுகளை மிகவும் அணுக்கமாக கண்காணித்து அதற்கு பதிலடி கொடுப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

இதனிடையே பெரிக்காத்தான் கூட்டணி தலைவராக மொகிதீன் இருக்கிறார். ஆனால் அவருக்குப் பதிலாக லாருட் தொகுதி உறுப்பினரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான ஹம்ஸா ஜைனுடின் நாடாளுமன்ற எதிர்க்கட்சிக் கூட்டணியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இது குறித்து கருத்துரைத்தபோது ஹம்ஸா ஜைனுடின் நீண்ட அரசியல் அனுபவம் கொண்டவர். முக்கிய அமைச்சரவை இலாகாக்களை கவனித்தவர். அதன் அடிப்படையில்தான் அவருக்கு இந்த பொறுப்பு வழங்கப்படுகிறது என்று பைசால் தெரிவித்தார்.



## சபா கிமானிஸ் தடுப்பு முகாம் விவகாரத்தில் நான் பாராமுகமா?
# அவசரப்படாதீர்கள் என்கிறார் சைபுடின்

கோலாலம்பூர், டிச. 14-
நான் பதவியேற்று 5 தினங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் யாரும் அவசரப்பட்டு பேச வேண்டாம் என்று உள்துறை அமைச்சர் சைபுடின் நஸுதியோன் இஸ்மாயில் கூறினார்.

எப்போதுமே பொது கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் மதிப்பளிக்கின்றவன் நான். எனது கடந்த கால செயல்பாடுகளை ஊன்றி கவனித்தால் இது புரியும் யாரும் அவசரப்பட்டு முடிவுக்கு வர வேண்டாம் என்றார் அவர்.

தமக்கு எதிராக மனித உரிமை மீதான சுயேச்சை வழக்கறிஞர்கள் குழு தெரிவித்த குற்றச்சாட்டு குறித்து அவர் கருத்துரைத்தார்.

சபாவில் உள்ள கிமானிஸ் குடிநுழைவுத்துறை முகாமில் மிக மோசமான உணவு நெருக்கடியும் சுகாதார பிரச்சினையும் நிலவுகிறது. இதை உள்துறை அமைச்சர் சைபுடின் கண்டும் காணாமல் இருப்பதா என்று அந்த வழக்கறிஞர் குழு அவரை கடுமையாக சாடியிருந்தது.

இதற்கு பதிலளித்த அவர் இப்போதுதான் இந்த பிரச்சினையை நான் ஆராயத் தொடங்கியிருக்கிறேன். முதலில் இது பற்றி முழுமையான எல்லா விவரங்களையும் திரட்ட வேண்டும்.

என் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் மூலம் தேவையான தரவுகளை பெற வேண்டும். அதன் பின்னர் நடவடிக்கை எடுப்பேன். பதவி ஏற்று 5 தினங்கள்தானே ஆகியிருக்கிறது. அதற்குள் இப்படி தாண்டிக்குதித்தால் நான் என்ன செய்வது என்று அவர் வினவினார்.

அந்த தடுப்பு முகாமில் மிகவும் மோசமான சூழலில் பரிதாபமாக காட்சியளிக்கும் ஒரு நபரின் படம் வெளிவந்தது. அவர் கைது செய்யப்படுவதற்கு முன்பே அப்படி ஒரு கோலத்தில்தான் இருந்தார் என்று கடந்த டிசம்பர் 9 ஆம் தேதி சைபுடின் அறிவித்த பதிலில் சுயேச்சை வழக்கறிஞர்கள் குழு இயக்குநர் ஸைட் மாலிக் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

இப்படி ஒரு கருத்தை ஒரு உள்துறை அமைச்சர் சொல்வதா? மிக முக்கியமான விவகாரத்தில் ஓர் அமைச்சரின் பதிலா இது என்று அவர் கூறியிருந்தார்.




AG11530/14/12/22